# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் - 01.09.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2551/SCIC/2024**

திரு.கோ.சுகுமார் - மேல்முறையீட்டாளர்
த/பெ.திரு.ப.கோவிந்தசாமி
எண்.3/73, டாக்டர் அம்பேத்கர் தெரு
காரனோடை, சென்னை - 600 067
Phone:89391 81943.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
செங்குன்றம் காவல் மாவட்டம்
ஆவடி காவல் ஆணையரகம்
சென்னை - 600 051.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **08.12.2023** |
| 2. | மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 12.12.2023 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 05.01.2024 |
| 4. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 20.01.2024 |
| 5. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 19.02.2024 |
| 6. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 28.02.2024 |
| 7. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 24.09.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 08/12/2023 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ காவல் ஆணையர் அலுவலகம், ஆவடி, சென்னை-54 அவர்களுக்கு அனுப்பி, அதில் “பார்வை - அவசர உதவி எண்.100-க்கு தொலைபசி மூலம் அளித்த புகார் எண்.CFS15616383 நாள் 03/11/2022 மற்றும் நான் 13/11/2022

அன்று திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மணலி நியூ டவுன் அமைந்துள்ள M-7 காவல் நிலையத்தில் நேரில் சென்று அளித்த புகார் மனு - தொடர்பாக - இப்புகார் மனு மீது விசாரணை செய்ய மணலி நியூ டவுன் அமைந்துள்ள M-7 காவல் நிலையத்தில் நியமிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவியின் பெயர் தர வேண்டுகிறேன்." என்பன போன்று 7 (ஏழு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.கோ.சுகுமார் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.விவேக் கண்ணன், காவல் உதவி ஆணையாளர், மணலி சரகம், ஆவடி காவல் ஆணையரகம் அவர்கள் உரிய அங்கீகாரக் கடிதத்துடன் ஆஜரானார். இவ்வழக்கு, மனுதாரர், தனது வாகனம் காணாமல் போனது குறித்து அளித்த புகார் மனு கிடைக்கப் பெறவில்லை என்பது குறித்தானது ஆகும். மனுதாரர் தெரிவிக்கையில், தான் நேரில் சென்று புகார் மனு அளித்துள்ளேன் எனக் கூறினார். அதற்கு பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, மனுதாரர் அளித்த புகார் மனு குறித்து எவ்வித சான்றும் காவல் நிலைய பராமரிப்பில் இருந்து வரும் பதிவேட்டில் எவ்வித பதிவுகளும் இல்லை என்றும் அவ்வாறு புகார் மனு அளித்துள்ளதாகத் தெரிவிப்பது தவறானது என்றும் கூறியதோடு, இப்பொருண்மை தொடர்பாக மனுதாரருக்கு பதில் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார். **எனினும், மனுதாரரின் 30/11/2022 தேதியிட்ட புகார் மனு, பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதியிடம் அளிக்குமாறு, மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டது. எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், செங்குன்றம் காவல் மாவட்டம், ஆவடி காவல் ஆணையரகம் அவர்கள் மேற்சொன்ன புகார் மனுவின் மீது உரிய சட்ட விதிமுறைகளின்படி விசாரணை நடத்துவதோடு, அது குறித்த தகவலை / அறிக்கையினை மனுதாரருக்கு 15 தினங்களுக்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அது குறித்த நிறைவேற்றுகை அறிக்கையினை (Compliance Report) 30/09/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென பணிக்கப்படுகிறார். மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
மாநில தகவல் ஆணையர்

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2551/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
செங்குன்றம் காவல் மாவட்டம்
ஆவடி காவல் ஆணையரகம்
சென்னை - 600 051.

## மேல்முறையீட்டாளர்

திரு.கோ.சுகுமார்
த/பெ.திரு.ப.கோவிந்தசாமி
எண்.3/73, டாக்டர் அம்பேத்கர் தெரு
காரனோடை, சென்னை - 600 067
Phone:89391 81943.

RG/Sr.PC